பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையைப் பொறுத்தஅளவிலே, 2013-2014 ஆம் ஆண்டிலே 9004 பேர்களுக்கும், 2012-2013 ஆம் ஆண்டிலே 6,464 பேர்களுக்கும், 2011-2012-லே 3,266 பேர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இப்புனித அரசு வீட்டுமனைப் பட்டாக்களை இதுவரையிலே வழங்கி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை, தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பதுதான். இந்தத் தமிழ் மண்ணிலே தங்களுக்கும் சொந்த இடம் இருக்கிறது என்கின்ற சாதனை சரித்திரம் படைத்திருக்கிற ஒரே தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு தொகுதி, 57-வது வார்டில், டாக்டர் அம்பேத்கர் காலனி, அனுப்பானடி பகுதியிலே 250 குடும்பங்களும், 71-வது வார்டு, கீழ்மதுரை காலனியில் 110 குடும்பங்களும் உள்ளன. இந்த இரண்டு பகுதிகளும் தலித் மக்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என மாவட்ட நிருவாகம் மாநில அரசின் சம்பந்தப்பட்ட துறைக்குக் கடிதம் எழுதி இருக்கிறது. அதில் விரைந்து நடவடிக்கை எடுத்து, இந்த இரண்டு பகுதிகளுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாட்டில் 20 இலட்சம் பேர் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி மனு கொடுத்திருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே, அனைத்து மனுக்களையும் பரிசீலனை செய்து, உரிய காலத்தில இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி, அது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய வ நம்புகின்றேன்.

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், இதுவரை இல்லாத வகையிலே 7,72,367 பேர்களுக்குப் பட்டா வழங்கி, சரித்திர சாதனை படைத்திருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்தச் சபை நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டா என்பது Regular Scheme என்று சொல்லக்கூடிய வளமையான திட்டத்தின் மூலமாகவும், One-time Special Scheme என்று சொல்லக்கூடிய- அங்கே வீடுகளின் மூலமாக ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களுக்கு வரன்முறை செய்துகொடுக்கின்ற திட்டங்கள் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றது. அதில் சில வரையறைகள் இருக்கின்றன. இந்த Regular Scheme-ஐப் பொறுத்தவரையில், அதற்குத் தேவையான விதிமுறைகள் வீட்டுமனை ஒப்படை வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் வகுக்கப்பட்டு, கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குக் குறைவாக உள்ள வீடில்லா ஏழைக் குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குக் குறைவாக உள்ள வீடில்லா ஏழைக் குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. One-time Special Scheme என்று சொல்லக்கூடிய வரன்முறைப்படுத்திக் கொடுக்கக்கூடிய பட்டாக்களைப் பொறுத்தளவில் வருமான உச்சவரம்பு என்பது கிடையாது. ஆகவே, நத்தம் புறம்போக்கு, தீர்வை ஏற்படுத்தப்படாத புஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படுத்தப்படாத நஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படுத்தப்பட்ட புஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படுத்தப்பட்ட நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் போன்றவை வீட்டுமனை ஒப்படை செய்யத் தகுதியுள்ள நிலங்களாகக் கருதப்படுகின்றன. இந்த நிலங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அடையாளம் காணப்பட்டு, தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா என்பது பேப்பரிலே மட்டும் வழங்காமல், அந்த நிலத்தை ஆய்வு செய்து அளந்து, பயனாளிகளிடத்திலே நேரடியாக ஒப்படைக்கின்ற ஒரு சரித்திர சாதனையையும்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) செய்திருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

கூடுதல் கட்டடம்

***13623—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் உட்பட அடிப்படை வசதிகள் செய்திட நபார்டு பகுதி XII திட்டத்தின்கீழ், அரசாணை நிலை எண் 156, பள்ளிக் கல்வித் துறை, நாள் 8-10-2014-ல் ரூ.74.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் நான்கு வகுப்பறைகள் ரூ.44.08 இலட்சம் செலவிலும், ஓர் ஆய்வுக் கூடம் ரூ.30.62 இலட்சம் செலவிலும் கட்டிட பொதுப் பணித் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மாணவர்கள் ஏற்றம் பெற எண்ணற்ற கல்வித் திட்டங்களைத் தந்து, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையிலே வினா தொடுத்து விடை பெறுவதற்குள், எனது அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சயனபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.74 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடமும், ஆய்வகமும் வழங்கி, அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளை எனது தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

சாலை வசதி

***14442—திரு. ம. கலை அரசு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சியிலுள்ள மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிமீது வெற்றி வந்து கழகத்தைச் சாரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சாரும், அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும், (மேசையைத்